**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.72/2015**

**வழக்கு சாட்சி: PW.2**

**தேதி: 19.04.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **நாராயணன்** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **முத்தையா** | **தொழில்:** | **கிராம உதவியாளர் ஓய்வு** |
| **கிராமம்:** | **பனங்காடி** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **காளையார்கோவில்** | **வயது:** | **68/2023** |

(எதிரிகள் 1, 2 ஆஜர் இல்லை, 1, 2 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு-317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3வது எதிரி ஆஜர்.)

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி:**

இரண்டு நாட்கள் கழித்து முத்துராமலிங்கம் மகன் செந்தில் என்பவர் எங்கள் அலுவலகத்திற்கு வந்தார். அவர் சம்பவ புகார் சம்பந்தமாக பேசுவதற்காக வந்ததாக சொன்னார். முன்விரோதம் சம்பந்தமாக தானும் அக்கா மகனும் சேர்ந்து கொலை செய்ததாக சொன்னார். எங்களை காப்பாற்றிவிடுவதாக சொன்னார். அவரை சிவகங்கை தாலுகா காவல் நிலையம் கூட்டிச் சென்று ஆஜர் செய்தோம். அங்கு தொடர் நடவடிக்கை எடுத்தார்கள். அதன் பின் நான் செல்லவில்லை.

**(சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

என்னை காவல் ஆய்வாளர் விசாரணை செய்யும் போது மேற்படி செந்தில் வெள்ளைச்சாமி மற்றும் தனது அக்கா மகன் சதீஸ் சேர்ந்து கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டத்தைச் சேர்ந்த மரியசூசை மகன் பெத்தானிஸ் என்பவரை பணம் கொடுக்கல் வாங்கலில் இருந்த முன் விரோதத்தையும் பெத்தானிஸ் தனது மனைவியுடன் தகாத உறவு வைத்திருந்ததை மனதில் கொண்டும் கடந்த 4 மாதங்களுக்கு முன்பு மூவரும் ஒன்று சேர்ந்து பெத்தானிஸை திட்டம் போட்டு தனிமையில் அழைத்து சென்று மாலை சுமார் 06.30 மணிக்கு பனங்காடி கிராமத்தை சேர்ந்த டீக்கடை மாணிக்கம் என்பவருக்கு சொந்தமான பட்டா எண்.800ல் உள்ள கிணற்றில் அருகே வைத்து கொலை செய்து கிணற்றுக்குள் போட்டுவிட்டு பின்னர்

ஒரு மாதம் கழித்து தீ வைத்து கொளுத்தி தடயத்தை மறைத்துவிட்டதாக அவர் கொடுத்த வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்யும் போது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். என்னை காவல் ஆய்வாளர் விசாரிக்கும் போது மேற்படி செந்தில் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அங்கிருந்த பனங்காடி கிராமம் நாகமலை மகன் மலைச்சாமி மற்றும் ஆய்வாளர் அவர்கள் இருந்தார்கள் என்றும் பதிவு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் தாங்களும் எதிரி செந்திலும் கையெழுத்து செய்தோம் என்று சொன்னால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. என்னை காவல் ஆய்வாளர் விசாரிக்கும் போது மேற்படி எதிரி செந்தில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி 10.30 மணிக்கு சம்பவயிடம் சென்று பார்வையிட்டும் சம்பவயிடத்தில் கிடந்த சம்பவத்திற்கு பயன்படுத்திய குண்டு கல்லையும் மறைத்து வைத்திருந்த மண்ணெண்ணெய் கேனையும் எடுத்து ஆய்வாளர் மற்றும் எங்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து ஆஜர் செய்தார் என்றும் அந்த அத்தாட்சியில் நாங்கள் கையெழுத்து செய்தோம் என்றும் சொன்னால் என்னிடம் காட்டப்படும் மண்ணெண்ணெய் கேனை மட்டும் நான் பார்த்ததாக எனக்கு ஞாபகம் உள்ளது. அந்த மண்ணெண்ணெய் கேன் **அ.த.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த அத்தாட்சியில் உள்ள முதலாவது எனது கையெழுத்து **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் 1வது எதிரி செந்தில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது கையெழுத்து **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை காவல் ஆய்வாளர் விசாரிக்கும் போது கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் நிலையம் வந்து ஆஜர் செய்தோம் என்றும் பின்னீடு 11.45 மணிக்கு நிலையம் வந்து பொருட்களை ஒப்படைத்தோம் ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் சிவகங்கை காமராஜர் பஸ் ஸ்டாப்பில் வைத்து மதியம் 02.00 மணிக்கு 3வது எதிரியான வெள்ளைச்சாமியை கைது செய்து வெள்ளைச்சாமி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தோம் என்றும் 3வது எதிரி வெள்ளைச்சாமி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள எனது கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாலை 05.30 மணிக்கு எதிரியை நிலையம் கொண்டு வந்து ஒப்படைத்தார் என்றும் காவல் ஆய்வாளரிடம் நான் மறு வாக்குமூலம் அளித்தேன் என்றும் சொன்னால் எனக்கு அது குறித்து ஞாபகம் இல்லை. நான் இந்த

எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கில் ஏற்கனவே காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது நான் நடந்த விபரங்களை வாக்குமூலமாக சொல்லிவிட்டு தற்போது அவைகளை மாற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

அ.சா.1 விஏஓ நாட்டரசன்கோட்டையின் விஏஓ என்றால் சரிதான். அவர் கூடுதலாக பனங்காடி குரூப் விஏஓ-வாக பணியாற்றினார் என்றால் சரிதான். அவர் முதன்மையாக நாட்டரசன்கோட்டை பொறுப்பை தான் பார்ப்பார் என்றால் சரிதான். அங்குள்ள பணிகளை முடித்துவிட்டு பின்னர் தான் பனங்காடி வந்து பொறுப்புகளை கவனிப்பார் என்றால் சரிதான். பொதுவாக அவசர வேலையை தவிர மற்ற சமயங்களில் 11 அல்லது 12 மணிக்கு தான் பணிக்கு வருவார் என்றால் சரிதான். போலீசார் தான் எலும்புக்கூடு கிடப்பதாக புகார் கொடுக்க வருமாறு அழைத்தார்கள் என்றும் அதன் பேரில் நாங்கள் புகார் கொடுக்க சென்றோம் என்றும் சொன்னால் சரியல்ல. செந்தில் எங்களிடம் சம்பவம் பற்றி கூற வந்த போது நாங்கள் விசாரித்து எதுவும் தெரிந்து கொள்ளவில்லை. காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரித்துக் கொள்ளலாம் என்று அழைத்து சென்றுவிட்டோம் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்துள்ள அத்தாட்சியில் எழுதியுள்ள விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கையெழுத்து மட்டும் கேட்டார்கள் நான் போட்டேன். அதேபோல் ஒப்புதல் வாக்குமூலத்திலும் கையெழுத்து கேட்டார்கள் நான் கையெழுத்து போட்டேன். நான் முதல் விசாரணையில் மண்ணெண்ணெய் கேனை பார்த்ததாக கூறியுள்ளதை எங்கு பார்த்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. மற்ற விஷயங்கள் சம்பந்தமாக நான் அடிக்கடி எங்கள் அதிகார வரம்பில் உள்ள சிவகங்கை தாலுகா காவல் நிலையம் என்பதால் அங்கு அடிக்கடி செல்வேன் என்றால் தேவைப்பட்டால் செல்வேன். அவ்வாறு போகும் போது காவல் நிலையத்தில் எனக்கு நன்கு பழக்கம் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க எதிரி செந்தில் என்னிடம் வந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எழுதப்படாத வெள்ளைப் பேப்பரில் தான் கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் புகார் கொடுத்த சமயத்தில் மட்டும் தான் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அன்று ஒரு சமயத்தில் தான் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரிதான்.